# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
******

**முறையீட்டு மனு எண்: 217/2019/மா**
**ஆணை நாள்: 20–02–2020**

**திருமதி. பவானி,**
**அம்பத்தூர்,**
**சென்னை – 600 053.** – முறையீட்டு மனுதாரர்

**உதவி பொறியாளர்,**
**மண்டலம் – 07, கோட்டம் - 86,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.** – எதிர் மனுதாரர்

சென்னை 53, அம்பத்தூர் பிரிதிவிபாக்கம், அப்பர் கெனால், கிரின் லேண்டு, முத்துச்சரம், எண். 2, F-2 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. பவானி என்பவரது 02.12.2019 நாளிட்ட முறையீட்டு மனு 04.12.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனு எண். 217/மா/2019 என எண்ணிடப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை:**

முறையீட்டு மனுதாரர் தனது 02.12.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில், சென்னை மன்னூர்பேட்டை குயவர் தெரு, எண். 139 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. கோவிந்தம்மாள் என்பவர் உரிய கட்டிட அனுமதியின்றி, கட்டிடம் கட்டி வருவதாகவும், அக்கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள புகார் தெரிவித்தும், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 07, 86வது கோட்டம், உதவி பொறியாளர் நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு மீது, பெருநகர சென்னை மாநகராட்சி, 7வது மண்டல அலுவலர் சமர்ப்பித்துள்ள தனது 3.2.2020 நாளிட்ட அறிக்கையில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடம், கட்டப்பட்டுள்ள இடம் இந்து சமய அறநிலைத்துறைக்கு சொந்தமானது என்றும், இக்கட்டத்தின் தரைதளம் மற்றும் முதல் தளம் 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது என்றும், தற்போது 2018 ஆம் ஆண்டு இரண்டாம் தளத்தில் ஒரு பகுதியில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்றும், இக்கட்டிடத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கட்டிட உரிமையாளருக்கு 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் பிரிவு 56, 57 மற்றும் 85ன் கீழ் அறிவிப்பு மற்றும் மூடி முத்திரையிடுதல் மற்றும் இடிப்பதற்கான அறிவிப்புகள் வழங்கப்பட்டது என்றும், இதனை எதிர்த்து கட்டிட உரிமையாளர் அரசிடம் மேல் முறையீடு செய்துள்ளார் என்றும், இம்மேல்முறையீடு மீது அரசு வழங்கும் தீர்ப்பின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி 7வது மண்டலம், 86வது கோட்டம், உதவிபொறியாளர் 10.02.2020 அன்று விசாரணையின் போது அளித்த வாக்குமூலத்தில் தான் 86வது கோட்டத்தில் உதவி பொறியாளராக பணபுரிவதாகவும், இக்கோட்டத்தில் பணியில் சேர்வதற்கு முன்பே கட்டிடம் கட்டப்பட்டுவிட்டது என்றும், கட்டிட உரிமையாளர் அரசுக்கு மேல் முறையீடு செய்திருந்தால் அதன் ஆவணங்களின் நகல்களை சமர்ப்பிப்பதாக தெரிவித்தார்.

முறையீட்டு மனுதாரர் 13.2.2020 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட உதவி பொறியாளருக்கு புகார் அனுப்பியும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மீது உரிய விதிகளின்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதாக தெரிவித்தார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, வாக்குமூலம், மண்டல அலுவலரின் அறிக்கை மாநகராட்சி சார்பாக விசாரணைக்கு ஆஜரான உதவி பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவைகளை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது கட்டிட உரிமையாளர் உரிய கட்டிட அனுமதி ஏதும் பெறாமலும், விதிமீறியும் கட்டிடம் கட்டியுள்ளது அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயலாக உறுதியாகிறது. மாநகராட்சி மண்டல அலுவலரின் அறிக்கையில் கட்டிட உரிமையாளர் அரசிடம் மேல் முறையீடு செய்துள்ளதாகவும், அம்முறையீடு மீது வழங்கப்படும் தீர்ப்புரையின்படி நடவடிக்கை

எடுக்கப்படும் என தெரிவித்துள்ளனர். இந்நேர்வில் விதிமீறிய மற்றும் அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்களின் உரிமையாளர்கள் அரசிடம் கட்டிடம் வரன்முறை படுத்துவதற்காக மேல் முறையீடு செய்திருப்பினும், அவ்வாறான மேல் முறையீட்டின் மீது தடை உத்தரவு ஏதும் வழங்கப்படாத நிலையில் நட்வடிக்கை மேற்கொள்ள தடை ஏதும் இல்லை என அரசானை (நிலை) எண்.111 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD4) (3) துறை நாள்: 22.6.2017 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி உரிய சட்ட விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி 7வது மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்:

(1) திருமதி. பவானி,
க/பெ. கே. சுந்தர்,
எண்.2, F-2, கிரீன்லேண்ட் முத்துசாரம்,
அப்பர்கெனால், பிரிதிலிபாக்கம்,
அம்பத்தூர், சென்னை – 600 053.

(2) மண்டல அலுவலர்,
மண்டலம் -07,
பெருநகர சென்னை மாநகராட்சி,
CTH ரோடு, அம்பத்தூர்,
சென்னை - 600 053.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்